திரு. பெ. மலேச்சாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை முடிப்பதற்கு இந்த அரசு ஏதாவது கால அளவு நிர்ணயித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்பொழுது தான் ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகு தான் அதைப்பற்றி சொல்ல முடியும்.

I.A.S. Officers

*61 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the criterion adopted by this Government for recommending officers in the Madras Civil Service and Police Service for Indian Administrative Service and Indian Police Service; and

(b) whether officials from any particular department is preferred for conferring Indian Administrative Service?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இந்திய ஆட்சிப் பணி இந்தியக் காவல் துறைப்பணி தேர்வுக்குழுவின் கூட்டம் ஆண்டுக்கொருமுறை நடக்கின்றது. இக் குழு 1955-ம் ஆண்டு இந்திய ஆட்சிப்பணி/இந்தியக் காவல் துறைப்பணி (பதவி உயர்வு மூலம் நியமனம்) விதி முறைகளின்கீழ் அமைக்கப் பட்டுள்ளதாகும். அந்த ஆண்டில் ஜனவரித் திங்கள் முதல் நாளன்று மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் காவல் பிற துணைக் கண்காணிப்பாளர் பதவியில் எட்டு ஆண்டுகளுக்குக் குறையாத கால அளவுக்குத் தொடர்ந்து பணியாற்றி முடித்தவர்களும், மாநில சிவில் பணியைக் காவல் துறைப் பணியைச் சேர்ந்தவர் களுமான நிலேயான உறுப்பினர்களது நேர்வுகளே இக் குழு ஆராய்ந்து “தேர்வுப்பட்டியல்” ஒன்றைத் தயாரிக்கின்றது. அத் தேர்வுப் பட்டியல் மத்தியப் பணியாளர் தேர்வுக் கழகத்தினாலும், இந்திய அரசினாலும் ஒப்பளிக்கப்பட்ட பின்னர், அத் தேர்வுப் பட்டியலில் கண்டுள்ள மாநில ஆட்சிப்பணி காவல் துறைப்பணி அதிகாரிகள் முறையே இந்திய ஆட்சிப்பணி இந்தியக் காவல் துறைப்பணிக்கு நியமிக்கப்படுகின்றனர்.

(இ) இல்லே. தொடர்புள்ள துறைகளேச் சேர்ந்த தகுதியுள்ள அதிகாரிகள் அனைவரின் உரிமைகளும் இது குறித்து ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, இதுவரையில் சட்ட மன்றத் துறையிலிருந்து யாராவது இந்திய அரசுப் பணிக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

THIRU K. VINAYAKAM : While officers of the Madras Civil Services are being recommended for being taken in into the Indian Administrative Service is the principle of communal

representation or the principle of giving preference to the Backward Classes, Most Backward Classes and Harijans being observed as was being observed in the past?

THE HON. THIRU C. N. ANNADURAI : The question is about the criterion adopted by this Government for recommending officers in the Madras Civil Service and Police Service for Indian Administrative Service and Indian Police Service and I have explained the procedure. I have not explained the policy behind these things.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாநில சர்வீஸிலிருந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக்குவதற்குச் சிபார்சு செய்கின்ற கோட்டாவை அதிகப்படுத்துவதற்கு சர்க்கார் ஏதேனும் முயற்சி எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இது தொடர்பான பல பிரச்சினைகள் குறித்து கடிதப் போக்குவரத்துகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. க. இராமமூர்த்தி : ஐ.ஏ.எஸ், ஐ பி.எஸ். பதவிகளுக்கான சிபார்சைப் பொறுத்தவரைக்கும், ப்ரொஸிஜர் சம்பந்தமாக இது வரையிலும் ஏதாவது அதிகாரிகளுக்கு விதிவிலக்கு அல்லது சலுகைகள் தரப்பட்டிருக்கிறதா ? அப்படி ப்ரொஸீஜரிலிருந்து விதிவிலக்குத் தரப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதைப்பற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தரலாம்.

தனித் தமிழ்நாடு கோரும் சுவரொட்டிகள்

* 62 வினா.—**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968 மார்ச் மாதத்தில் கோவை, ஈரோடு, திருப்பூர் ஆகிய நகரங்களில் தனித் தமிழ் நாடு கோரும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) தனித் தமிழ் நாடு வேண்டுமென்கிற தமிழ்ச் சுவரொட்டிகள் 1968 மார்ச் திங்களில் கோயம்புத்தூரிலும் ஈரோட்டிலும் காணப்பட்டன.

(இ) 1967-ம் ஆண்டு சட்ட விரோதச் செயல்கள் (தடைச்) சட்டத்தின் 13-வது பிரிவின்கீழ் வழக்கு ஒன்றை ஈரோடு நகர்க் காவல் துறை பதிவு செய்துள்ளது. இது இப்போது புலனாய்வில் உள்ளது.